# குற்றாலக் குறவஞ்சியில் சமகாலப் பதிவுகள்

**மு.கயல்விழி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முனைவர் மு.ஞானத்தாய்**
*தமிழ்த் துறைத் தலைவி மற்றும்*
*முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர்*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முன்னுரை**

இலக்கியங்கள் சமகால நிகழ்வுகளைப் பதியச் செய்து விட்டுச் செல்கின்றன. தம் கால நிழ்வுகளை எடுத்துரைப்பதன் மூலம் அவை சமூக உணர்வுடன் திகழ்கின்றன. சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களைப் பற்றி எடுத்துரைப்பதோடு, சமூக ஏற்றத் தாழ்வுகளையும் காய்தல் உவத்தலகற்றி எடுத்துரைக்கும் நூல்களே காலத்தை வென்று அமர இலக்கியங்களாகத் திகழ்கின்றன. தமிழில் தோன்றிய பழம் இலக்கியங்களில் பெரும்பான்மையானவை உயர் தட்டு மக்களைச் சித்தரிப்பனவாகவே அமைந்ததோடு மட்டுமல்லாமல், உயர்வு நவிற்சியையும் கொண்டு திகழ்கின்றன. தலை சிறந்த மேல்நாட்டுக் கவிராயர்களான ெல்லி (Percy Bysshe Shelley), கீட்ஸ் (John Keats), பைரன் பிரபு (George Gordon Neel Byron)> வேட்ஸ்வொர்த் (William Wordsworth), கோல்ரிட்ஜ் (Samuel Taylor Coleridge), ப்ளேக் (William Blake), பர்ன்ஸ் (Robert Burns) போன்றோர் படைத்த இலக்கியங்கள் சாமானியரை மையமாகக் கொண்டும், சமகால நிகழ்வுகளைப் பதியச் செய்தும் படைக்கப்பட்டன. எனவே அவை மக்கள் இலக்கியங்களாக (Peoples Literature) இன்றும் கொண்டாடப்படுகின்றன. அந்த வகையில் எளிய அடித்தட்டு மக்களின் வாழ்வியல் நிலையை மையமாகக் கொண்ட குற்றாலக் குறவஞ்சி தமிழிலக்கியத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தது. அது அடித்தட்டு மக்களான குறவரின் வாழ்வியல் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு, சமகால நிகழ்வுகளையும் பதிவு செய்து விட்டுச் சென்றுள்ளது. எனவே அது கால நிகழ்வுகளைத் தாங்கி நிற்கும் கால ஆவணமாகும். இந்நூல் பல்சிறப்புகள் கொண்டதோடு மட்டுமல்லாமல் பழங்கால நிகழ்வுகளை அளிக்கும் வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றது. பல்சிறப்பு வாய்ந்த இந்நூல் விட்டுச் சென்ற காலப்பதிவுகளை ஈண்டு ஆராய்வோம்.

குற்றாலக் குறவஞ்சி 17 ஆம் நூற்றாண்டுத் தமிழ் மக்களின் வாழ்க்கை ஆவணங்களாகும். இந்நூல் எளிய அடித்தட்டு மக்களான குறவரின் வாழ்வியல் நிலையை எடுத்துறைக்கின்றது. குற்றாலத்தில் நடந்த பல்வகையான வரலாற்றுச் செய்திகளையும் இந்நூல் பதிவு செய்துள்ளது. குற்றாலப் பகுதியில் இருந்த பல நீர் நிலைகளையும், நிலங்களையும், பறவைகளையும் இந்நூல் மூலம் அறிய முடிகின்றது. குறவரின் வேட்டைத் தொழிலையும், அதில் பெற்ற வெற்றிகளையும் ஏமாற்றங்களையும் கவிஞர் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளார். மலை வாழ் மக்களான குறவரின் தனித்திறன்களையும் இந்நூல் பதிவு செய்து விட்டுச்சென்றுள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த பல வள்ளல்களையும், அவர் தம் கொடைகளையும் இந்நூல் பட்டியலிடுகின்றது. குற்றாலக் குறவஞ்சி நூல் நமக்கு கிடைக்கவில்லை என்றால் அக்காலத் தமிழ் மக்களின் வாழ்வியல் நிலையை அறிய முடியாமலே போயிருக்கும்.

**சமகால நிகழ்வுகளும்,இயற்கைப் பதிவுகளும்**

குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியரான திரிகூடராசப்பக் கவிராயர் தன் வாழ்வில் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அறிந்தவற்றையும் தன் நூலில் பதிவு செய்து விட்டுச் சென்றுள்ளார். அவர் கூறும் செய்திகள் யாவும் இந்நூலைத் தவிர வேறெதிலும் அறியக்கூடவில்லை. அவர் காலத்தில் திமிர் கொண்ட துலுக்கன் ஒருவன் குற்றாலமலைக்கு குதிரையின் மீது ஏறிச் செல்ல முயன்றான். இதனைக் கண்ட அடியார்கள் அவனைத் தடுத்தி நிறுத்தி அவ்வாறு செல்லுதல் தெய்வக் குற்றம் என்று கூறினர். ஆனால் அவன் அதை மீறி குதிரையேறிச் சென்றான். போகும் வழியில் அவன் குதிரையின் குளம்பு பாறை இடுக்கில் சிக்கிக் குதிரையும், அவனும் கீழே விழுந்து மடிந்தனர். இச்செய்தியைக் கீழ்கண்டவாறு உரைக்கின்றார்:

“ஆசார ஈனத் துலுக்கன் குதிரை
அடியொட்டுப் பாறை அடியொட்டி னாற்போலும்”
(சிங்கன், நூவனைப் பேசாதிருக்கக் கூறுதல்: 99.4.5-6)

கவிஞர் இந்நூலில் பலவிதமான இயற்கைக் காட்சிகளையும் பதிவு செய்துள்ளார். அக்காலத்தில் சிவகைலாய மலை, கொல்லி மலை, விந்திய மலை, சுவாமி மலை, வெள்ளி மலை, போன்ற மலைகள் சிறப்புற்றுத் திகழ்ந்தன. கவிஞர் காலத்தில் அழகிய புலியூர், இலஞ்சி, மேலகரம், செங்கோட்டை, நல்லூர், சிற்றம்பலம், குன்றக்குடி போன்ற ஊர்கள் பேரும் புகழுடன் திகழ்ந்தன. குற்றால மலையில் செண்பச் சோலை, சந்தனச் சோலை போன்ற சோலை வனங்கள் காணப்பட்டன.

குற்றாலத்தில் பல நீர்நிலைகள் இயற்கையாய் அமைந்தும், சில செயற்கையாய் பெரியோர்களால் வெட்டுவித்தும் மக்களால் பயன்படுத்தப்பட்டன. அவை செங்குலமேல் செய், வராய்ச் செய், காடுவெட்டிச் செய், நீடுசுண்டைக்காட்டுச் செய், காங்கேயன் செய், ஸ்ரீகிருஷ்ணாமேட்டுச் செய், முனிகுருக்கள் செய், ஏறிவாய்ச் செய், சீவலப்பேரிச் செய், இராசகுலராமன் செய், கண்டுகொண்டான் செய், மேலைமாறிப்பற்றுச் செய், கீழைமாறிப்பற்றுச் செய், சன்னநெறிப் பற்றுச் செய், ஊருணிச் செய், நெடுஞ் செய், ஆறடிப்பற்றுச் செய், கணக்கன்பற்றுச் செய், வெண்ணமடைச் செய், கட்டான் செய், கள்ளிக்குலச் செய், அழகர்பள்ளச் செய், கூத்தன்மூலம் செய், கோயில்வளைச் செய், செல்லபுதுக்குலச் செய், பக்தர்கணக்குச் செய், சம்பிரதிகணக்குச் செய், குற்றாலபேரிச் செய் போன்ற நீர் நிலைகள் காணப்பட்டன.

பாறைக் குளம், வழுதிக் குளம், பெருங் குளம், செங்குறிச்சிக் குளம், புளியங் குளம், துவரைக் குளம், ஏரிக் குளம், வழிமறித்தான் குளம், தென் குளம், செங் குளம், பாண்டியன் குளம், சாட்டப்பெருங் குளம், மாரனேறிக் குளம், மத்தனப்பாறைக் குளம், குலசேகரபேரிக் குளம், ஆயிரம்பேரிக் குளம், தென்காசிக் குளம் போன்ற பல குளங்களை மக்கள் பயன்படுத்தினர். இது தவிர பல நிலங்கள் காரணப் பெயர்கள் கொண்டு திகழ்ந்தன. அவை செங்குளப் பற்று, மேலைபாட்டைப் பற்று, காடுவெட்டிப் பற்று, சுண்டைப் பற்று, மேட்டைப் பற்று, முனிகுருக்கள் பற்று, ஏரிவாய்ப் பற்று, சீவலப்பேரிப் பற்று, வடகால் பற்று, திருப்பணி நீளம், ஆலடிப் பற்று, கணக்கன் பற்று, நம்பியார் திருத்து, கற்பூரக்கா பற்று, தட்டான் குளச்சுற்று போன்றவைகளாகும். இவை யாவும் சிறப்பான வயல் நிலங்களாகும்.

> "பாரைக் குளந்தெற்கு மேல்வழு திக்குளம்
> பாட்டப் பெருங்குளம் செங்குறிஞ் சிக்குளம்
> ஊருணிப் பற்றும் திருப்பணி நீளம்
> உயர்ந்த புளியங் குளந்து வரைக்குளம்
> மாரனே ரிக்குளம் மத்தளம் பாறை
> வழிமறித் தான்குளம் ஆலடிப் பற்றும்
> ஆரணி குற்றாலர் தோட்ட நெடுஞ்செய்
> அபிடேகப் பேரிக் கணக்கன் பற்றிலும்"
> (சிங்கன் பறவைகள் கீழிறங்குதலைச் சொல்லுதல்: 91-4)

**குற்றாலக் குறவஞ்சியில் வரலாற்றுப் பதிவுகள்**

குற்றாலக் குறவஞ்சியில் பல வரலாற்றுச் செய்திகள் கவிஞரால் உரைக்கப்படுகின்றன. தன் கால வரலாற்று நிகழ்வுகளைப் பின்வரும் சந்ததியினர் அறியும்வண்ணம் தன் நூலில் பதியவிட்டுச் சென்றுள்ளார். கல்வெட்டுகள் கூட அளிக்காத பல வரலாற்று உண்மைகளை அவரின் நூல் மூலம் அறியமுடிகின்றது.

கிளுு என்ற ஊரைத் தலைநகராகக் கொண்ட நாடு வடகரை நாடு. இதன் அரசன் சின்னணஞ்சாத் தேவன். இவன் குற்றாலநாதர் ஆலயத்தைச் சுற்றி மதில் சுவர் அமைத்துத் தந்தான். மேலும் இவ்வூரில் அன்னசத்திரம் கட்டியும், கோயில் படிக்கட்டுகளை அமைத்தும், தென்காசிப் பாலத்தை புதியதாய் நிறுவியும், சுவாமிக்கு ஆறு வேளை பூசைக்கு வேண்டிய நிலங்களையும் தானமாய் வழங்கியும் சிறப்பு செய்தான்.

> "ஆலயம் சூழத் திருப்பணி யுங்கட்டி
> அன்னசத் திரங்கட்டி அப்பாலும் தென்காசிப்
> பாலமுங் கட்டிப் படித்தரிஞ் சேர்கட்டிப்
> பத்த சனங்களைக் காக்கத் துசங்கட்டி
> மாலயன் போற்றிய குற்றால நாதர்
> வழித்தொண்டு செய்திடக் கச்சைகட் டிக்
> கொண்ட
> சீலன் கிளுவையிற் சின்னணைஞ் சேந்தரன்"
> (சிங்கன், பறவை இரை மேய்தலைச் சொல்லுதல்: 93-3)

வடகரை நாட்டின் படைத்தலைவன் வயித்தியப்பன் என்பவன். இவனுடைய மூத்த மகன் சவரிப்பெருமாள், இளையவன் பச்சைப்பிள்ளை. இவர்கள் இருவருமே வள்ளல்களாகத் திகழ்ந்தனர்.

வடகரை நாட்டின் அமைச்சன் பிச்சைப்பிள்ளை என்பவன். இவன் குற்றாலநாதர் மீது அந்தாதி பாடினான். இவன் மருதூரைச் சார்ந்தவன்.

பிச்சைப் பிள்ளையின் மகன் வைத்தியநாதன் என்பவன். இவன் குற்றாலத்தில் பிள்ளையார் கோயிலைக் கட்டினான். மேலும் குற்றாலநாதர் கோயில் படிக்கட்டுகளை அமைத்தும் சிறப்பு செய்தான். இவனது தமையன்கள் இராக்கதப் பெருமாள் பிள்ளை மற்றும் குற்றாலநாதப் பிள்ளை. இவனது மைத்துனன் சங்குமுத்துப் பிள்ளை என்பவன். இவர்கள் அனைவருமே அக்காலத்தில் வாழ்ந்த பெரும் வள்ளல்கள்.

தென்காசியை ஆட்சி செய்தவன் அனந்த பத்மனாபன் என்பவன். இவனது மகன் வைத்தியநாதன். இவன் குற்றாலத்தில் கோயில் தெப்பத் திருவிழாவை எடுத்ததுடன், சித்திர

மண்டபம், அன்னச் சத்திரம், வழிபோக்குச் சாலை முதலியவற்றையும் ஏற்படுத்தினான்.

“நன்னகர் ஊட்கட்டிச் சாலை மடங்கட்டி
நாயகர் கோவிற் கொலுமண்ட பங்கட்டித்
தென்ன மரம்பர மானந்தத் தோப்பிட்டுத்
தெப்பக் குளங்கட்டித் தேர்மண்ட பங்கட்டிப்
பன்னுந் திரிகூடத் தம்பலங் கட்டிப்
பசுப்பிரை கோடி திருப்பணி யுங்கட்டி
அந்நாளில் தர்மக் களஞ்சியம் கட்டும்
அனந்த பத்மநாபன் கட்டளைப் பற்றெல்லாம்”
(சிங்கன், பறவை இரை மேய்தலைச் சொல்லுதல்: 93-6)

ஆறை அழகப்ப முதலியார், திருமலைக் கொழுந்துப் பிள்ளை, பூநாதன், சங்குப்பிள்ளை, நரபாலன், பால்வண்ணச் சங்கு, ஒமலூர் கிரு'ணன், பம்பைச்சங்கு முத்து, சக்கரைப் பண்டாரம், சுந்தரத் தோழன், கருவை ராமநாயகன், தாகம் தீர்த்தான், நல்லூர் சங்கர மூர்த்திப் பிள்ளை, சடைத் தம்பிரான், கண்டக சேதனச் செட்டி, சிவராமன், மணிப்பட்டன், முத்து நம்பி, குற்றால நம்பி போன்றோர் அக்காலத்தில் வாழ்ந்த சான்றோர்களும், பெரியோர்களுமாவர்.

### குறவரின் தனித்திறன் பதிவுகள்

குறவர் பலவிதமான தனித்திறன்கள் கொண்டவர்கள். பிற இனத்தவர்கள் அறியா வித்தைகளை நன்கறிந்திருந்தனர். இவர்கள் பெண்களை வசியம் செய்யும் வசிய மருந்து செய்யும் முறையை அறிந்திருந்தனர். இம்மருந்தை ஆண்மகன் உண்டால் மரத்தால் செய்த பாவையும் அவனைப் பின் தொடர்ந்து வரும். அவர்கள் வெறுப்பு மருந்தும் அறிந்திருந்தனர். இம்மருந்தை உண்ட கணவன் மனைவியர் வெறுப்பு கொண்டு பிரிந்து விடுவர். பருவ வயது வந்தும் மார்புகள் பெருக்காத பெண்டிருக்கு மார்புகள் பெருக்கச் செய்யும் மருந்தும், பருத்த மார்புடைய பெண்டிரின் மார்புகளைச் சுருங்கச் செய்யும் மோகினிப் பேய் மந்திரத்தையும் நன்கு அறிந்திருந்தனர்.

“வாடை மருந்துப் பொடியும் அம்மியூர்
மரப்பாவை பின்தொடர மாயப் பொடியும்
கூடியிருக்க மருந்தும் இருபொழுதும்
கூடியிருப் பார்களைக் கலைக்க மருந்தும்
காடுகட்டக் கினிக்கட்டு குறளி வித்தை
கண்கட்டு வித்தைகளும் காட்டித் தருவேன்”
(சிங்கன் நூவனுக்குக் கைம்மாறு கொடுத்தலைக்கூறுதல்:118-1)

இது தவிர வேட்டையாடும் பொழுது காட்டைவிட்டுப் பறவைகளும் விலங்களும் ஓடாமலிருக்கும் வசிய மருந்தும், நெருப்பைச் சுடாமல் குளிரச் செய்யும் குளிர் மருந்தும், பார்ப்பவர் தான் விரும்பியத் தோற்றத்தை நல்கும் கண்கட்டு வித்தையும் அறிந்திருந்தனர். பெரிய மலையை நீராகக் கரைந்து வழிந்தோடச் செய்யும் மருந்தும் அவர்கள் வசமிருந்தது. அஞ்சன மைபோட்டு பெண்களை வசியமாக்கும் மந்திரமும், எவர் கண்களுக்கும் தெரியாமல் எங்கு வேண்டுமானும் சென்று வரும் மந்திரமும், வான் வழியேப் பறந்து செல்லும் சித்து வித்தையும் அவர்களுக்கு அத்துபடி.

“மலையைக் கரையப் பண்ணுவேன் குமரிகட்கு
வாராத முலைகளும் வரப்பண்ணுவேன்
முலையை ஒளிக்கப் பண்ணுவேன் ஒளித்தபேர்க்கு
மோகினி மந்திரஞ்சொல்லி வரப்பண்ணுவேன்
திலக வசீகரம் செய்வேன் ஒருவருக்கும்
தெரியாமற் போகவரச் சித்தும் அறிவேன்”
(சிங்கன் நூவனுக்குக் கைம்மாறு கொடுத்தலைக்கூறுதல்:11.8-2)

அவர்கள் வேசியரை வசப்படுத்தும் சூளை என்ற மருந்தும், பிறரைப் பேசாமல் கட்டுவிக்கும் வாடைப் பொடியினையும் வைத்திருந்தனர். இவ்வாறு பலவகை மந்திர தந்திரங்களை அவர்கள் அறிந்தாலும் அவற்றை நன்மைக்காகப் பயன்படுத்தினாரேயன்றி தீய வழியில் யாண்டும் பயன்படுத்தியிலர்.

### அக்கால வேட்டைப் பறவைகள்

குறவர்கள் பறவைகளை வேட்டையாடி உண்டனர். சிலவற்றை பணத்திற்கு விற்கவும் செய்தனர். காடுகளில் உள்ள பறவைகளைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். எந்தெந்தப் பறவைகளை எப்படி வேட்டையாடினால் அகப்படும் என்பதை நன்கு அறிந்திருந்தனர். அவர்கள் ஆலாக்கள், கொக்குகள், நாரைகள், அன்னப் பறவைகள், தாராக்கள், கூழைக் காடாக்கள், செங்கால் நாரைகள், காடைகள், சம்பங்கிக் கோழிகள், கொண்டைக் குலாத்திகள், காக்கைகள், மாடப் புறாக்கள், மயில்கள், ஊர்க் குருவிகள், உள்ளான்கள், வலியன்கள், கருங் குருவிகள், கானாங் கோழிகள், கொக்குகள், வெண் புறாக்கள், செம்போத்துக்கள், ஆந்தைகள், மீன் கொத்திகள், மரங் கொத்திகள், பச்சைக் கிளிகள், நாகணவாய்ப் பறவைகள், சிட்டுகள், கரிக் குருவிகள், அன்றில் பறவைகள், வௌவால்கள் போன்ற பறவைகளை வேட்டையாடிப் பிடித்தனர். இவற்றை காடுகளிலும், குளங்களிலும்,சோலைகளிலும், நீர்நிலைகளிலும் வேட்டையாடினர்.

“காடை வருகுது கம்புள் வருகுது
காக்கை வருகுது கொண்டைக் குலாத்தியும்
மாடப் புறாவும் மயிலும் வருகுது
மற்றொரு சாரியாக் கொக்குத் திரளெல்லாம்”
(சிங்கன், பறவைகள் வரவு கூறுதல்:4.1-4)

"வெள்ளைப் புறாவும் சகோரமும் ஆந்தையும்
மீன்கொத்திப் புள்ளும் மரங்கொத்திப் பட்சியும்
கிள்ளையும் பஞ்சவர் னக்கிளிக் கூட்டமும்
கேகயப் பட்சியும் நாகண வாய்ச்சியும்
உள்ளானும் சிட்டும் வலியானும் அன்றிலும்"
(சிங்கன், பறவைகள் வரவு கூறுதல்:5.1-5)

**முடிவுரை**

இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்பர். இவை மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் போது தனிச்சிறப்பு பெறுகின்றன. இவ்வகையில் தமிழில் மக்கள் இலக்கியமாக குற்றாலக் குறவஞ்சி நூல் திகழ்கின்றது. இது 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுத் தமிழ் மக்களின் வாழ்க்கை ஆவணமாகும். எளிய அடித்தட்டு மக்களைப் பற்றி சிந்திக்ககூட அஞ்சிய ஒரு காலகட்டத்தில் அவர்களின் வாழ்வியல் நிலைகளைக் கிஞ்சித்தும் அஞ்சாமல் படம் பிடித்துக்காட்டிய இவ்விலக்கியம் மிகவும் போற்றுதற்குரியது. மேலும் அம்மக்கள் பேசிய மொழிநடையில் இந்நூல் படைக்கப்பட்டமை சாலவும் சிறப்புடையதாகும். தம்கால நிகழ்வுகளைப் பதியச் செய்து பின்வரும் தலை முறைகளுக்கு அவற்றைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்று எண்ணிய இக்கவி மிகவும் பாராட்டுக்குரியவர். நற்பேறின் காரணமாய் இந்நூல் நமக்குக் கிடைத்தது. இல்லாவிடில் அக்கால நிகழ்வுகளைத் தமிழ் சமூகம் அறியாமலே போயிருக்கும். மன்னர்கள், பிரபுக்கள், உயர்க்குடியினர், நிலச்சுவாந்தார்கள் மற்றும் ஜமீந்தார்களைப் புகழ்ந்துப் போந்த பொய்ப் புனைந்துரை இலக்கியங்களுக்கு மத்தியில் எளிய மக்களைச் சிறப்பித்துப் படைக்கப்பட்ட இவ்விலக்கியம் தமிழ்த் தாயின் மணி மகுடமாகத் திகழ்கின்றது. குற்றாலக் குறவஞ்சி உரைக்கும் காலப்பதிவுகள் நம் தலைமுறைக்கு மட்டுமல்லாமல், எதிர்காலப் பல தலைமுறைகளும், பல்லாயிரம் ஆண்டுகள் அறிந்தின்புறத்தக்க கால ஆவணங்கள் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

**பார்வை நூற்பட்டியல்**

1. புலியூர் கேசிகன், (2009), குற்றாலக் குறவஞ்சி, சென்னை: சாரதா பதிப்பகம்.
2. திருக்குற்றாலக் குறவஞ்சி, (1953), தென்காசி: ஸ்ரீமீனாட்சி பிரஸ்.
3. புன்னைவனநாத முதலியார்.பு.சி ரூ இராமசாமிப் பிள்ளை. செ, (1950), குற்றாலக் குறவஞ்சி, திருநெல்வேலி: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.